உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது
பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம்: விரோதி வரு (1889) ஆவணி 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 400. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 36

பத் அக] ய ப்பாணம் பிங்கள வரு தை மீ உ அ-ம் வெள்ளிக்கிழமை (10-2-1978) [ஆலை: சுங]

# சைவபோத ஆசிரியரின் சமயங்கற்பித்த முன்மாதிரி

## சிவபாதசுந்தரனார் செய்த மதத் தொண்டு

நாமெல்லோரும் சைவமதச் சார்புடையோர் தான். ஆனால் அச் சமயத்துக்குரிய நெறியை ஆன முறையில் அறிந்தவர்களாய் உள்ளவர்கள் சிலர். அவரினும் சிலர் அறிந்ததை அநுபவிப்பவர்கள். கல்லூரி ஆசிரியராக இருந்த ஸ்ரீ சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு இந்த நிலைமை தெரியும். அவர் ஆசிரியர்மட்டுமல்ல. இருவென இருந்து எழு என எழுந்து குரு சிட முறையிற் பாடங் கேட்டவரும் ஆவர். எனவே நாவலர் நற்றகையார் எடுத்த பணியைத் தொடுத்து நடத்த உந்தப்பெற்றார். அதன் பயனே அவர் இயற்றிய அரிய நூல்கள்.

பால பாடங்களும் புராண சூசனங்களும் பெரும்பாலும் படியுயர்ந்த மாணுக்கர்களுக்கே யுதவும். சைவ வினாவிடைதான் ஆரம்ப வகுப்பினருக்குரியது. எனினும் சின்னஞ்சிறு வயதிற் சமய நெறியைப் புகுத்துவது சற்றுக் கடினமே. பிள்ளைகளை கதையோடு கதையாய் உள்ள உண்மைகளை அறிய வைப்பது நல்ல முறை என்று சுந்தரனார் மிக இலகுவான நடையிற் கதை சொல்லிச் சமயநெறி விதைகளை விதைக்கச் சைவபோதம் முதலாம் புத்தகத்தை எழுதினார்கள். அக் காலத்திலே மறைந்திருந்த சமய மாற்ற விபரீதம் தலை தூக்கிக் கொண்டிருந்தது. பள்ளிக்கூடங்கள் வாயிலாக இம் மத மாற்றத்தைத் திட்டமிட்டுச் செய்து வந்தனர் மற சமயத்தார் என்பதை நேராகக் கண்ட சுந்தரனார் தமக்கென உள்ள தனிப் போக்கிலே குதர்க்கத்தை வெல்லும் தர்க்க சாஸ்திர முறையைக் கையாண்டார்.

சைவ வினாவிடை நாவலர் தந்த கொடை. அதை அநுபவிக்கத் தக்க விதமாக எழுந்தது சைவபோத நூல் நடை. பசுமரத்தாணி பராயத்திற பாலர்களை விளையாட்டாகவே கற்கவேண்டும். சமயநெறி படித்து விளையாட்டிய மாணுக்கர்களை மறவாதவர் சைவப் பெரியார்.

நூல் எழுவது என்றால் எல்லோராலும் முடியாது; எதைப்பற்றி எழுத வேண்டும்? என்ற எண்ணமில்லாது புத்தகம் படைக்கும் புதுயுகம் இது. அச்சில வருபவை எல்லாம் மதிப்புப் பெறுகின்றன. எழுதியவர்களை அரங்கு வைத்துப் பாராட்டுகின்றனர். பொற்கிழி வழங்குகின்றனர்; ஆனால் அக் காலத்தில் எழுத்தாளர் பரம்பரை ஒன்றிருந்தது அவர்களுக்கு அரங்கேற்றுகை யாரும் அமைக்கவில்லை! என அரங்கில் அவைய நூலை சிறியார்களிலும் பார்க்க ஆற்றல் படைத்தவர்கள் இல்லை நாவலர் பதிப்பு என்றால் அது தனி மதிப்பு. முதற் பிரதி பெறுவாரில்லை! அதுமட்டுமா? அதை அறிமுகப்படுத்துவாரைக் கண்டிலேம்!

(வளரும்)

## தீப பேதம்

ஐந்தடுக்குள்ள அலங்கார தீபம் பஞ்ச கலைகளைக் குறிக்கின்றது. மூன்றடுக்குள்ள தீபம் முத்தத்துவங்களைக் குறிக்கின்றது. இத தீபத்தால் ஆராதிப்பின ஆன்ம சுத்தியுண்டாம்.

நாகதீபம் புத்திர விருத்தியின் பொருட்டும், இடபதீபம் பசுவிருத்தியின் பொருட்டும், புருசதீபம் சகல சித்தியின் பொருட்டும், நக்ஷத்திர தீபம் உரோகசாந்தியின் பொருட்டும் விதையின் பொருட்டும், கும்பதீபம் மல நிவாரணத்தின் பொருட்டும், ஐந்து தட்டைகள் ஈசானம் முதலிய ஐந்து குணங்கள் பதிதற பொருட்டும், தூபம் சாயுச பதவியின் பொருட்டும்; செம்பஞ்சும் விபுத்திர மும் திருட்டி தோஷ நீக்கத்தின் பொருட்டும், விபூதி மூவுலசாக்ஷியின் பொருட்டும் சிவசந்நிதியில் ஆராதிக்கப்படுகின்றன.

—சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்)

## வண்ணை-கொண்டலடிப் பிள்ளையார் கோயில்

யாழ். வண் - கிழக்கு கொண்டலடிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின விழா தை 30-ம் நாள் (8-1-78) ஞாயிற்றுக்கிழமை நிகழும், இரவு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவர் விசேட மங்கல வாத்திய இசையும், அதையடுத்து விசேட பூசை ஆராதனையும் சுவாமி பூதகண்டிகையில் வீதி உலா வரும் நிகழ்ச்சியும் இடம்பெறும்,

## வட பகுதியில் வன்செயல் விசாரணை

ஓய்வுபெற்ற நீதியரசர் சன்சோனி ஆணையாளராகவுள்ள ஆணைக்குழு இப்பொழுது யாழ் நகரில் விசாரணை நடத்துகின்றது அரச பேரவை உறுப்பினர்களும் வேறு பிரமுகர்களும் சாட்சி பகருகின்றனர். ஒரு மாத காலம் இவ் விசாரணை நீடிக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## புண்ணிய நாச்சியம்மை தினம்

திருவருளை முன்னிட்டு 19-2-78 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையவர்களின் நினைவு தினம் நிகழும் மாசி மாதம் 7-ம் திகதி (19-2-78) ஞாயிற்றுக்கிழமை சைவ பரிபாலன சபை ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

முற்பகல்:-
காலை 9.00 மணிக்கு ஆரம்பம்.
சிவபூஜா மண்டபம் சிவபூசை
நாவலர் மண்டபம் விசேடபூசை
கோவிற் புராணபடனம்
வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் புண்ணியநாச்சியம்மையாரின் பேரில் அபிஷேகம்
மாகேஸ்வர பூசை

பிற்பகல்:-
மாலை 5.00 மணிக்கு ஆரம்பம்.
தலைவர் திரு ச. செல்வராசா அவர்கள்
(தலைவர் சைவபரிபாலனசபை)
தமிழ் மறை ஓதுதல்
(சபை நாவலர் மண்டப தேவார வகுப்புப் பிள்ளைகள்)
பண்ணிசை நிகழ்ச்சி
(பண்ணிசைத் தேர்வில் சித்தி பெற்றவர்கள்)
பண்ணிசைப் போட்டிப் பரிசு வழங்கல்
(சலாசிதி பிரம ஸ்ரீ க. கைலாசநாதக் குருக்கள் M. A இந்து நாகரீக பீடத்தலைவர் யாழ் வளாகம்)
புண்ணியநாச்சி அம்மையின் தொண்டு
திரு நம சிவப்பிரகாசம் (இந்துசாதனப் பத்திராதிபர்)
புண்ணிய நாச்சியார்மை தர்ம சாதனம்
(திரு சிவ உ. சோமசேகரம் M. A Dip-In-Ed இணுப்பாறிய வடமாகில வித்தியாதிபதி)
நன்றியுரை:-

மு மயில்வாகனம்,
சமயப் பிரசார அமைச்சர்
சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்

க. சிற்றம்பலம்
கௌரவ காரியதரிசி

## கச்சியப்பரை வழிபடுவோம்

### மாவைத் திருமுருகன் பதியில் கந்தபுராணம் தந்தார்க்குப் பெருவிழா

### திருவிளையாடலை அமைத்து உருவான ஒரு பெரும் அருட்காப்பியம்

கலியுகம் இது: அதற்குரிய தெய்வம் கந்தக் கடவுள். அந்த மெய்ஞ்ஞான தெய்வத்தை நினைந்து நெஞ்சம் உருக வைத்தவர் கச்சியப்ப சிவாசாரியார்.

கச்சியப்ப சிவாசாரியர் குருபூசை மாசி 5-ஆம் நாள் (17-2-1978) வெள்ளிக்கிழமையன்று பல இடங்களிலும் அநுட்டிக்கப்படும்.

மாவைக் கந்தன் ஆலயத்தில் அகில இலங்கைச் சைவ மகாசபையினர் இவ் விழாவை நடத்துகின்றனர். ஆதீன கர்த்தர் பிரம்மஸ்ரீ து சண்முகநாதக் குருக்கள், பண்டிதர் மு கந்தையா, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் இ. நமசிவாயம் கலாசாலை அதிபர் இராஜ. சண்முகரத்தினம், பண்டிதர் வே சங்கரப்பிள்ளை வளாக நூலக பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் இவர்களும் இன்னும் பலரும் கலந்து கொள்வர். தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் நிகழ்ச்சிகளை நடத்துவர்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்

பிங்கள ஹூ தை மீ உக-உ வெள்ளி


## நல்லநெறி; சொல்லளவில்!

'அறஞ் செய விரும்பு" என்று ஔவைப் பிராட்டி சொன்னது தர்ம வழியை நாடு என்பது மட்டுமல்ல, அந்நெறியில் நிற்பாயாக எனக் கட்டளையுண்டு அதை மீறாதே என்பதுவே.

இலங்கைச் சனாதிபதி மகிமைக்குரிய திரு. யே. ஆர். ஜயவர்த்தன தர்மவழியிலே இந் நாட்டு ஆட்சி நிகழுமென்றிருக்கிறதாக மிகுந்த பயபக்தியுடன் சமய புனித நிலையத்திலிருந்து பிரகடனஞ் செய்திருக்கின்றார். வாய்ப் பேச்சில் வாய்மையுடையது. ஆனால் உலக வழக்கில் எத்துணை அறநெறி அமையும் என்பதே கேள்வி.

அறத்தை வலியுறுத்திய அம்மூதாட்டி அடுத்தாற்போல் 'ஆறுவது சினம்' எனக் கூறியதில் அருங் கருத்துண்டு, தணிய வேண்டியது கோபம், அதற்கு வழி அன்புடைமை. எனவே அறமும் அன்பும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை என்பது புலனாகும்.

இனத்தால் மதத்தால் மொழியால் வேறுபட்டாலும் மனத்தால் மாறுபட வேண்டியதில்லை. மனித குலத்துக்குரியவர்கள் ஒத்த மனத்தராய் இயங்க வேண்டும். ஏன்? மானிடப் பிறவி மகத்தானது, ஆறறிவின் பேறுடையது. ஒருவரை ஒருவர் மறுக்கவோ வெறுக்கவோ வேண்டியதில்லை!

இந்த உணர்ச்சி மக்கள் மதியில் உண்டாகுமேயானால் அறம் அன்றி வேறு என்ன நிலவும். மனிதனை மனிதனாக மதிக்கும் மரபு விளங்குவதானால் விவகாரம் விபரீதம் என்பன விளையா.

எல்லோரும் வாழ வேண்டும்: நாம் வாழ்வது மட்டுமல்ல; மற்றையோரையும் வாழவிடவேண்டும்.

ஆகவே மக்கள் கருமம் முழுவதும் மனச்சான்றுக்கு மாறாகாததாயமைதல் கடமை. பொருட்களை உண்டுபண்ணுதலும் அவற்றை நியாயமான இரயத்துக்கு விற்றலும் மக்கட் பண்பு. இது நலமின் விளைவு குன்றும். காரணம் அதர்மம் இவ்வாறே எத்தொழிலிலும் நேர்மை வாய்மை நிகழ்வதாயின் விருத்தியுண்டாகும்.

## பலிவழக்கம் ஒழிய உழைத்தவர்


### ஆதீன அடியார் அரனடி அடைந்தனர்

நல்லை திருஞான சம்பந்த ஆதீன மேனாளராகப் பெருந் தொண்டாற்றிவந்த சிவநெறிச் செல்வர் திரு. வே. சபாபதிப்பிள்ளை அவர்கள் இவ் வுலக வாழ்வு நீத்தனர் என்ற துயரச் செய்தி கிடைத்திருக்கின்றது.

ஆசிரியராக இருந்து ஓய்வெடுத்த பிள்ளையவர்கள் சைவ பரிபாலன சபை முதலிய சைவத் தாபனங்களிலும் ஈடுபட்டுழைத்து வந்தனர். தல யாத்திரை, தீர்த்த யாத்திரை இவைகளைத் தவறாது செய்து வந்த திரு. சபாபதிப்பிள்ளை அவர்கள் அவ்வப்போது அவைகளைத் திரட்டி எழுதி வந்தார்கள். அத்துடன் யாத்திரீகர்களுக்கு இருக்கும் வசதியீனங்கள்; தேவைகள் உதவிகள இவை இவை என்று சுட்டிக்காட்டி வருவார்கள். சைவமாநாடுகளிலும் சபையின் ஏனைய விசேட நிகழ்ச்சிகளிலும் திரு. பிள்ளையவர்கள் முன்னணியில் நிற்பதைக் காணலாம். ஆதீனப்பணிக்குத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்த பெருந்தகை திரு. பிள்ளையவர்கள் கந்தபுராண படனம் எங்கு நிகழ்ந்தாலும் ஆங்கு ஒருமுறையாவது சமுகங்கொடுக்கத் தவறாத பெரியார். 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த' இவர் சிலஆலயங்களில் நிகழும் மிருகப்பலி வழக்கம் ஒழிய அயராது எழுதியும் பேசியும் வந்தார்.

## உத்தமர்கூறிய உயரியநெறி

### உள்ளச் சுதந்திரத்தை இழக்கலாமா?



காந்திஜி 'மகாத்மா' என்ற பெயரோடு விளங்கிய சமயம் ஒரு நாள் ஒரு பொதுக் கூட்டத்தில் அவரை மிஸ்டர் காந்தி என்றழைத்து ஆங்கிலத்தில் உரையாற்றினார் ஜனாப் ஜின்னா. அப்போது அருகிலிருந்த மௌலானா, மூகமது அலி முதலியோர் "மகாத்மா" என்றழைக்கும்படி ஜனாப் ஜின்னாவைக் கேட்டுக்கொண்டனர், கூட்டத்தில் நின்ற மக்களும் அவ்வாறே கூச்சலிட்டனர். ஆனால் ஜனாப் ஜின்னா தம் பிடிவாதத்தை விடவில்லை!

இந்நிலைமையில் காந்திஜீ எழுந்து, 'நான் மகாத்மா இல்லை; சாதாரண மனிதன்தான் — ஜின்னா அவர்களின் சுதந்திர எண்ணத்தில் தலையிடக்கூடாது. நம எண்ணங்களைப் பிறர்மீது சுமத்தினால் புனித சுதந்திரத்தை அடையமாட்டோம்! மற்றவரைப்பற்றி ஒருவர் எவ்விதக் கருத்துக் கொண்டிருந்தால் என்ன! என்றிருத்தலே நலம்" என்றார், மக்கள் அமைதியாக இருந்தனர்.

உ

சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

## சைவ சமய பாடப் பரீட்சை

## அகில இலங்கைப் பரிசில்கள் 1977.

### 9 - ஆம் வகுப்பு

1. இரமணி சியாமா நடராசா - திருநாவுக்கரசு வித்தியாசாலை (தங்கப் பதக்கம்) கொடிகாமம்
2. கௌரிசங்கர் நாகேந்திரம் யாழ். இந்துக் கல்லூரி
3. பிரியதர்சினி பாலேந்திரா வட. இந்து மகளிர் கல்லூரி

### 8 - ஆம் வகுப்பு

1. சாந்தினி சாமிநாதன் யாழ் இந்து மகளிர் கல்லூரி (தங்கப் பதக்கம்)
2. வசந்தமேனி கைலாசபிள்ளை இராமநாதபுரம் மேற்கு அ. த. க. வித்தியாசாலை
3. வசந்தி சுப்பிரமணியம் வட இந்து மகளிர் கல்லூரி

### 7 - ஆம் வகுப்பு

1. சிவானந்தி சண்முகநாதன் வட. இந்துமகளிர் கல்லூரி
2. சசிகலா இரத்தினசபாபதி யாழ். இந்து மகளிர் கல்லூரி
3. ஹேமமாலினி சோமாஸ்கந்தர் „

### 6 - ஆம் வகுப்பு

1. நாகரஞ்சனி பேரின்பநாயகம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
2. ஸ்ரீ குமரன் குமாரசுவாமி யாழ் இந்துக் கல்லூரி
3. உலகநாயகி எதிர்த்தம்பி முல்லைத்தீவு மகா வித்.

### 5 - ஆம் வகுப்பு

1. குமுதினி பாலலிங்கம் முத்துத்தம்பி மகா வித் யாழ்ப்.
2. பிரபாகரன் சுந்தரலிங்கம் அரியாலை ஸ்ரீ பார்வதி வித.
3. நளாயினி ஸ்ரீ நிவாசன் நல்லூர் மங்கையர்க்கரசி வித்.

### 4 - ஆம் வகுப்பு

1. கார்த்திகேயன் விவேகானந்தன் யாழ். இந்துக் கல்லூரிக் கனிஷ்ட வித்தி.
2. மாலினி செல்வநாயகம் யாழ் பெரியபுலம் மெ மி: பாட
3. சியாமினி இராசையா கரம்பொன் சிறியபுஷ்ப மகளிர் கல்

### 3 - ஆம் வகுப்பு

1. இரவீந்திரன் இராசதுரை யாழ்ரன் கனிட்ட வித் காரை.
2. பாமதி ஜெகநாதன் யாழ். புனித மரியாள் வித்து
3. பிரேமானந் இராஜகோபால் யாழ் பெரிய புலம்

### 2-ஆம் வகுப்பு

1. மதிவதனி யோகநாதன் வரணி மகா வித்தியாலயம்
2. சசிந்தவன் சாந்தராசா யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
3. [illegible] இராமநாதன் கல்லூரி சுன்னாகம்

சைவபரிபாலனசபை, ஆ. சிவரத்தினம்,
யாழ்ப்பாணம், 4-2-78; பரீட்சைக் காரியதரிசி,

## நாம் செய்த தவக் குறையே

### வித்துவான் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு தமிழக அறிஞர் கவலை

பண்டிதர், வித்துவான் க சுப்பையபிள்ளை அவர்களின் மறைவு சைவ உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். இதற்கு ஈடுசெய்ய இயலாது நாம செய்த தவக் குறைவுதான் காரணம் என்பேன் இறைவன் திருவடியில் அன்னாரின் ஆன்மா சாந்தியுடனிருக்குமாறு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசப் பெருமான் திருவடிகளை இறைஞ்சுகின்றேன், அவர் பிரிவால் வருந்தும் அவரது நண்பர்களுக்கும், குடும்பத்தினருக்கும் என் ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

வாழ்க சைவம்! வளர்க அவர் தம் நற் புலமை!!
ஓங்குக அவர்தம் புகழ்!!!

இத்தகைய பெரியவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வது 32 தர்மங்களில் ஒன்று என்பார்கள் பெரியவர்கள்.

சித்தாந்த வித்தகர்,
கயப்பாக்கம்
க சோமசுந்தரம செட்டியார்.

## மதுரைப் பன்னிரு திருமுறை மன்றம்

நல்லை. திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளது பிரதம சிஷ்யன் "கான கதாவாரிதி" ஊரெழு பிரம்மஸ்ரீ சிவ. வை, நித்தியானந்த சர்மா அவர்கள் சென்ற மாதம் மதுரை பன்னிரு திருமுறை மன்றத்தின அழைப்பின் பேரில் இன்னிசை விரிவுரை நிகழ்த்த தமிழகம் சென்று மதுரை. சேனி, சின்ன மன்னூர். திருச்சி மற்றும் பல இடங்களில் விரிவுரைகள் நிகழ்த்தி பாராட்டுடன் ஈழம திரும்பியுள்ளார்.

பொதுசன நூல்நிலையத்தில்

## ஜீ. ஜீ. சிலை

யாழ் நகர விசேட ஆணையாளர் திரு சிவஞானம் அவர்கள் யாழ். பொதுசன நூல் நிலைய முன்றலில் இடது பக்கத்தில் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் சிலை நிறுவ ஒதுக்கப்பட்ட நிலத்தை ஜீ ஜீ. ஞாபகார்த்த தின விழா வன்போது முறைப்படி ஜீ ஜீ. ஞாபகார்த்தக் குழு தலைவரிடம் ஒப்படைத்தனர்.

அன்று பல இடங்களிலும் ஜீ ஜீ. நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கந்தபுராணப் படிப்பு

## பார்பதியம்மன் திருக்கலியாணம்

திருவருளைமுன்னிட்டு சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் கந்தபுராண படனத் தொடர்பில் நிகழும் பார்பதியம்மை திருக்கலியாணப் படிப்பு மாசி மூன்றாம் நாள் (15-2-78) புதன்கிழமை மாலை 5-00 மணி தொடக்கம் நடைபெறும்.

க. சிற்றம்பலம், செயலாளர், — மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்,

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம், 6 2-78.

# நீதி நூல்களும் தர்மநெறிச்சமுதாயமும்

(திரு. செ. சின்னத்துரை, ஓய்வுபெற்ற ஆசிரியர் ஏழாலை)

நீதியும், கட்டுப்பாடும் கண்ணியமும் நிறைந்த மக்களாக வாழவழி வகுக்க வேண்டுமென்று பற்பல இடங்கள் [illegible] ஜனாதிபதி அவர்கள் [illegible] எழுப்பியுள்ளார்கள். கடவுள் நம்பிக்கை, சமய வாழ்க்கை, நல்லொழுக்கம், கடமையுணர்ச்சி, நேர்மை உள்ள மக்கள்தான் இலங்கை திவை தாண்டக் களஞ்சியமாகவும் அமைதியும் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிரம்பிய நாடாக உருவாக்க முடியும். அரசியல் தலைவர்கள், குருமார், ஆசிரியர், பெற்றோர் முதலியோரின் ஒத்துழைப்புத் தேவை. அதுவுமின்றி அவர்கள் வாழ்ந்து காட்டவும் வேண்டும். அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களில் தாய மனவுணர்வின் பதியும் நீதி நூல்கள் இதற்கு பெரும் உதவிபுரியும்.

"ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்,
ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்"

என்ற அரிய உலக நீதியிலுள்ளவற்றை முதலாம் இரண்டாம் வகுப்பு மாணவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லப் பயிற்றப்படவேண்டும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி முதலிய வற்றைச் சிறார்கள் ஓதவும் விளங்கவும் உதவும் பாடசாலைகள் சங்கங்கள் என்பன முன் வரவேண்டும்.

இவற்றைத் தமிழ்ப் பாடங்களோடு சேர்த்து ஆசிரியர்கள் பயிற்றுவிக்கலாம்.

மனம் உண்டானால் இடமுண்டு என்பார்கள். எத்தனை யாழ்ப்பாண ஆசிரியர்கள் கிராமங்கள்தோறும் இருக்கிறார்கள். அவர்கள் சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு மணி நேரமாவது இந் நல்ல வழியில் தமது அரிய நேரத்தைப் பிரயோகிக்கலாம். 16 வயதுக்குள் பிள்ளைகளைத் திருத்த வேண்டும். அவர்கள் தறகால விபரீத சீர் கெட்ட எண்ணங்களின் வலையில் சிக்காமல் ஆவன வற்றை ஆசிரியர்களும், பெற்றோரும், அறிஞர்களும் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் எதிர்கால சமுதாயம் பண்பாடு, கண்ணியம், கட்டுப்பாடுள்ள சமுதாயமாக மிளிரும். அறநெறி அடிப்படையில் நீதியுள்ள சமுதாயமா (Just Society) மாக திகழும்.

கிராமங்கள்தோறும் முதியோர் கல்வி நிலையங்கள் (Adult Education Centure) நிறுவப்பட வேண்டும். திருக்குறள், கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம் முதலியன கற்பிக்கப்பட வேண்டும். கந்த புராணம் ஒரு சிறந்த களஞ்சியம். நல்லொழுக்கம் பக்தி முதலியவற்றைப் போதிக்கும் பகுதிகள் அதில் நிரம்ப உண்டு. இராமாயணம், பாரதம் முதலிய கதைகளை முதியோர் அறிய வேண்டும் அப்போதுதான் வாழ்க்கையை நல்வழிப்படுத்தலாம். பெற்றோரைப் பேணல், சகோதரத்துவம் முதலியவற்றை இதிகாசங்கள் நன்கு போதிக்கின்றன.

கல்லறிவை வளர்ப்பதற்கு திருக்குறள் ஒரு கருவூலம். திருக்குறள் வகுப்புகள் நடாத்தலாம். அறிஞர்கள் பண்டிதர்கள் ஆசிரியர்கள் இல்லாமல் இல்லை. வேண்டியது ஒருஉணர்ச்சி.

தர்ம சமுதாய எழுச்சி தமிழர்களுக்குப் பழைய பாடம் அன்றோ? இதில் அரசு பேரவை உறுப்பினர்களுக்கும் பெரிய பங்கு உண்டு. அவர்கள் முன் வந்து ஒரு இயக்கத்தை புனர்அமைக்கப் பெரிதும் பாடுபடலாம். இது பெரிய சேவை. எழுமின்! விழிமின.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இலாத்
செல்வரும் சேர்வது நாடு"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல ஈடு 1650

1. செல்லையா சின்னத்துரையும்
2. பெண் திருஞானம்பிகையும்
3. சின்னத்துரை ஞானபண்டிதன், எலலோரும் மாதகல் — வழக்காளிகள்

எதிராக

1. சின்னராசா பாலசிங்கம் பெண்
2. சரஸ்வதியும் இருவரும் கீரிமலை றோட் [illegible] வல் வெட்டித்துறை — எதிராளிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டில் இல. ஈடு 1650 இலக்க வழக்கில் வகைக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் பார்க்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 27ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-0 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத்தொகை.

ரூபா 1950 - பின் (27-1-77 தொடக்கம் 1-8-77 வரை ரூபா 1300 க்கு 10% வட்டியுடன் பின முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 412/10.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு மாதகல் இறை நாவலடி நிப ஆறரை (6½) ஆறும் ஆட்சிப்படியும் அளவின்படியும் நிப ஏழரை (7½) இதில் வடக்குப்பக்கமாக அறுதி விற்ற நிப இரண்டு (2) நீக்கி மிகுதியில் நிப இரண்டரை (2½) யும் அதனைச் சேர்ந்ததையும். எல்லை கிழக்கு வயித்திலிங்கம் சிவராதினத்தின் உரிமைக்காருக்கும் மறுதேருக்கும் உரிய காணி வடக்கு ஐயன் செல்லருக்கும் பொன்னுயுக்கும் உரிய காணி மேற்கு ஆறுமுழ அகலமுள்ள ஒழுங்கை தெறகு மிகுதக்காணி

சி. செ மாரிமுத்து
விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்

விசாலை வளவு,
சித்தங்கேணி 16-12 77.
93. 10-2-78

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல் படிவம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

மரணசாதன வியாயாதகப: இல 384

காலஞ்சென்ற சபாரத்தினம் இராசகம்பன் புலேந்திரா ஊப்பவரின் பரவை சாதனமில்லாச மரணம் [illegible] விடப்பதுல மரணமடைந்தவர்

சபாரத்தினம் இராசகம்பன் புலேந்திரா
கைம்பெண் இராஜேஸ்வரி, வதிரி, கரவெட்டி

மேலேயுள்ள இலக்கமுள்ள மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தும்பாணவரின் பரணச்சொத்தை நிருவகிப்பதற்கு பேருப்படி நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்டு, அதில் அதுவிலையாகப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளமையால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு மாசி மாதம் 23-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முறறுமுதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற கட்டளைப்படி
இ. லிங்கலிங்கம்,
பதிவாளர்,

1978 ஆம் ஆண்டு மாசி மாதம் 7-ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

96 10, 17-2-78

## அமாவாசை உற்சவர்

அமாவாசையில் மூல லிங்கத்துக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் அபிஷேக அலங்கார நிவேதனம் செய்து உற்சவம் செய்க. அமாவாசை உற்சவம் செய்பவர் புண்ணிய பேற்றை அடைவர். அகால மழை, ரோகம் முதலியன உளவாகா. அமாவாசை சோமவாரத்தோடு கூடி வரின் விஷு புண்ணிய காலத்துக்கும், சிவராத்திரிக்கும் ஒப்பாகும் அமாவாசை திருவாதிரையோடு சோமவாரத்தில் வரின் கோடியாக பலனையும் கோடி தபோதான பலனையுங் கொடுக்கும்.

பௌர்ணிமை உற்சவத்தை அமாவாசை உற்சவத்திற் கூறியவாறு செய்க. இதற்குப் பிரமாணம் மகோற்சவவிதியிற் காண்க,

— சிவஸ்ரீ ச, குமாரசுவாமிக்குருக்கள்

உ

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

# சித்தாந்தத் தேர்வு -1978

**பரீட்சை நடைபெறுங் காலம் : 29-12-78 முதல் 31-12-78 வரை**

**விண்ணப்பிக்கும் இறுதி நாள்: 31-10-1978**

பாட விதானம் — பரீட்சை விதிகள் தேவையானோர் 6 சத முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

சித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்யும் நோக்கமாக சனி, ஞாயிறு நாட்களில் வகுப்பு நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம், வகுப்பிற் சேர்ந்து படிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்,

தமிழ், சமயம் ஆகிய இரண்டு பாடப் பகுதிகளும் நடைபெறும்,

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 2-2-78.

வ. கந்தசாமி
தேர்வுச் செயலாளர்.

## பொதுக் கூட்டத் தீர்மானங்கள்

### வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

வண்ணை — சாக்கையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழக 24-ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 5-2-78 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வண் நாவலர் மகா வித்தியாலயத்தில் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

புதுவருட நிர்வாகிகள்

போஷகர்: 1 திரு W S செந்தில்நாதன் (சட்டத்தரணி) 2, பிரமஸ்ரீ தி, ந, சீதாராம சாஸ்திரிகள்,

தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் உபதலைவர்கள் திரு ந- V. S பாலசுப்பிரமணியம் வைத்திய கலாநிதி ந கனகரத்தினம் செயலாளர் திரு. க. இராஜ்யோகன் உப செயலாளர் திரு வே குகனேசன் பொருளாளர் திரு ம கணேசலிங்கம் நூலகப் பொறுப்பாளர் திரு கு கணேசராசா.

பரீட்சைச் செயலாளர் : சைவப் புலவர் வ கந்தசாமி கணக்குப் பரிசோதகர் திரு. எஸ், வள்ளிநாயகம் உட்கணக்குப் பரிசோதகர் திரு மு க. இரத்தினவேலுப்பிள்ளை

நிர்வாக சபை உறுப்பினர் 5 பேர் தெரிவு செய்யப்பெற்றனர்.

பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 வழமை பால சமய பாடப் பரீட்சை 2-1978 இல் நடாத்துதல்

2 7-5-1978 இல் 24-ஆவது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும் கொண்டாடுதல்.

3, 1979 ஆம் ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாடுதல்,

4. பண்டிதர் வித்துவான் ந, சுப்பையபிள்ளை அவர்களின் குடும்பத்தினருக்கு அநுதாபத் தீர்மானம்,

சட்டத்தரணி திரு. W, S. செந்தில்நாதன், வைத்திய கலாநிதி நா, கனகரத்தினம் சைவப்புலவர் வ, கந்தசாமி திரு, வெ. உலோகநாதன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

நமமுடைய செயல்கள் அனைத்தும் சுருதிக்கும் யுக்திக்கும் [illegible] இசைந்திருக்க வேண்டும்.

## யாழ் பெரியபுலம் வித்தியாலயம்

யாழ் பெரியபுலம் வித்தியாலய மாடிக் கட்டடத் திறப்புவிழாவும் பெற்றார் தின விழாவும் 11-2-78 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெறும்.

திரு. தி மாணிக்கவாசகர் அவர்கள் (வடமாநிலக் கல்வி அதிபதி) கொடியேற்றி வைப்பார்கள்.

திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் (நல்லூர்த் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர்) புதிய மாடிக் கட்டடத்தைத் திறந்து வைப்பார்கள். திரு P. சிவபாதம் அவர்கள் பிரதம கல்வியதிகாரி, கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம் திரு. N. R. பாலசிங்கம் அவர்கள் பிரதம கல்வியதிகாரி, கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம் விருந்தினர்களாய்ப் பங்குபற்றுவார்கள். திரு. கு. சோமசுந்தரம் அவர்கள் வட்டாரக் கல்வியதிகாரி, நல்லூர், நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

புற்றில்வாழ் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்து எம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே.

I fear not the snake in the hole, neither do I fear the truth uttered by liars But I greatly dread even to look at hypocrites who even after worshipping at the feet of our Frontal.eyed Lord possessed of matted locks, do not realize His greatness thinking of the existence of other (socalled gods (and placing them on a par with Him.

Hindu Organ

Friday, 10th February, 1978.

## For Attention Forthwith

Beg or borrow (of course steal not) and find the money to bring the system of public transport into some order.

Peraheras and processions certainly are a pleasing sight, but not for those who are always worried about the way they are compelled to live.

Schemes for development do require years But that does not mean that conditions of living cannot be temporarily improved.

If the omnibuses are all in a dilapidated state why cannot the Government commandeer trucks, trolleys and other motor vehicles to feed the C. T. B. service.

Precious working hours are daily wasted on the highways and the efficiency of administrative offices is being adversely affected. Late attendance, half-day leave and similar circumstances have a cumulative effect on the general trend of administration in the different departments.

Immediate attention has to be paid to the aspect of transport as the system is daily deteriorating.

Overloading is not the word for the present system of running buses with passengers packed inside and outside. Journey by bus has become thoroughly risky.

We are however hopeful that the New Premier, young, energetic and resourceful as he has been as a politician would be able to give the people their first need, normal facilities to travel about not on excursions but for earning their bread.

## Talaimannar to Rameswaram

So near yet very far, that is how a journey from Sri Lanka to South India works out. The steamer service between Talaimannar and Thanuskodi a decade ago was operated daily making travel from Sri Lanka to India convenient and less costly. However with the Airways coming into the picture the railway-steamer-railway service has been restricted.

The journey by Air is certainly speedy but undoubtedly probilitive in cost. When travel to India was made unduly difficult by imposing strict procedure in the issue of visas, exit permits and exchange facilities not all could afford to undertake such journeys. The large number of religionists who made annual pilgrimages to India had to be content with a simple vsoit,

Changes have been effected now in this sphere and it is understood that the steamer service has been extended to three times a week. However, it is being urged on behalf of the travelling public that the journey by rail between Sri Lanka and South India be facilitated by making it a daily service.

*Letter to the Editor*

## Indian Goodwill Mission

Sir,

The Special Mission from India to represent our great and noble neighbour at the happy installation ceremonies of the highly respected President of the Republic of Sri Lanka is one of the most welcome events in the contemporary history of both countries. The fact that a senior and elderly political leader and Administrator of the status and calibre of Sbri Charan Singh, Home Minister of Indian Cabinet, is heading the Mission, accompanied by Shrimathy Sinkh, indicates the weight attached by the Baratha Prime Minister Sbri Morarji Desai, a doyen among world's statesmen today, to the historic event. The relationship between the Indian sub-continent and Sri Lanka has been very close and friendly from time immemorial. The event and the personality of our country's beloved and respected leader, Hon. Mr. J. R Jayewardene is worthy of such recognition, if it could be said so with deference

Mr. Morarji Desai and Mr. Jayewardene have certain things in common. They are intensely religious and outspoken. They are also followers of Mahatma Gandhi They are independent and forthright in thought, word and action.

There is thus owing to a certain degree of similarity of outlook between the two Prime Ministers, a great possibility of their joint efforts producing distinctive beneficial results in furtherance of the cause of International Peace. The creation of a more ethical World Order is likely to be facilitated by such joint collaboration Mankind has been striving for this consummation based on the sublime principle of all religions and expressed by Lord Buddha in the immortal saying that "Hatred does not cease by Hatred but could cease only by Love" quoted by Mr Jayewardene at an important International Conference held after the Second World War in a powerful and victorious foreign country years ago in one of his striking and courageous utterances before a mixed audience which could not have been quite receptive on the occasion and in which utterance our Prime Minister spoke highly of Japan, then considered to be vanquished in the end of hostilities.

While continuing to wish India well as always it is our duty as Citizens of Sri Lanka to express our sentiments of warmest appreciation at the hand some gesture of the Government of India, and its people and of His Excellency the High Commissioner, Sardar Gurbachan Singh functioning happily in our midst, for enabling our country to be honoured with this gracious visit of the special Mission under such distinguished leadership and with such personnel and arranged with such prescient benevolence, reminiscent of the deep friendliness shown to our country by personalities like Swami Vivekananda, Mahatma Gandhi and Quaid E. Azam Jinnah and other leaders of the Indian Sub-Continent from time to time in unfailing and consistent manner.

S. SIVASUBRAMANIAM
Co-Founder & Life Member
India-Sri Lanka Friendship Society.
Hulftsdorp Street,
Colombo.

# தந்தைக்குப் புத்தி புகட்டிய மைந்தன்

தை 28-ஆம் நாள் சண்டேசுர நாயனர் குருபூசைத் தினம். அன்று சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சண்டேசுரநாயனர் புராணப் படிப்பு நிகழ்ச்சி நடந்தது.

*சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெகு அன்புடன் சண்டேசுர நாயனரை வாழ்த்துகின்றார் அத் திருப்பாட்டு இது :*

*இன்டைமலர் கொண்டுமேனை இலிங்கம(து)*
*இயற்றி இணைத்தாளின் பாலாட்ட*
*இடறியதாதை வைத்தாள்*
*தண்டமிடு சண்டிபாடி வண்டர் தொழு*
*தேத்தத் தொடர்ந்தவனைப் பணிகொண்ட*
*விடங்கனருள் வினவில்*
*மண்டபமும் கோபுரமும் மாளிகை*
*சூளிகையும் மறையொலியும் விழவொலியும்*
*மருளுநிறை வெய்திக*
*கண்டவர்கள் மனங்கவரும் புண்டரிகப்*
*பொய்கைக் காரிகையார் குடைந்தாடும்*
*கலயநல்லூர் காணே.*

"இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார்"

*என்று வன்றொண்டர் திருச்சோற்றுத்துறைப் பதிகத்தில் இறைவனைப் போற்றும் நெறி நிறைவான தொண்டனர்.*

While continuing to wish India well — see above.

The National dress as obtaining in India was first introduced in our country by Mr. V. Muttukumaru M. A. He himself was a lecturer in colleges and devoted his leasure to start a nationalist awakening along with Mr. M. S Elathamby B A. the versatile writer and orator. Those were the days of the Y M H A

*Review*

## 'Homage to a Guru'

S. Handy Perinpanayakam

This booklet has brought out the true characteristics of a pioneer nationalist who took up the thread where it was left by the sincere Gandhi follower, the late V. Muttukumaru of Temparance fame.

Certainly the Muttukumaru movement must have made an impression on young Perinpanayakam The calibre was good and the team that followed young Handy gave added lustre to the campaign

The publication contains fitting tributes from lecturers, lawyers and journalists to the memory of an exemplary man who imbibed the teachings of Mahatma Gandhi and fashioned his life in that patriotic manner 'Handy Master' is an affectionate expression, so very feelingly addressed by all his students, admirers and co-workers His was a very useful life, helpful to the countryr

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, February 10, 1978.

EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org